



# ஆனந்த பாஸ்கர்


PRGI No: TNMUL/25/A1387 உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR www.anandabhaskar.com








சென்னை மலர்: 01 இதழ்: 207 22.01.2026 வியாழக்கிழமை ›› Chennai ›› Volume: 01 ›› Issue: 207 ›› Thursday ›› pages 4 ›› Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(22-01-2026)
விசுவாவசு ஆண்டு, தை 8
பிறை: வளர்பிறை
திதி
சதுர்த்தி மறுநாள் பின்னிரவு 2.08 வரை பிறகு பஞ்சமி.
நட்சத்திரம்:
சதயம் பிற்பகல் 2.33 வரை பிறகு பூரட்டாதி
யோகம்
மரண/சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி
எமகண்டம்
காலை 6.00 – 7.30 மணி
சூலம் – தெற்கு.
நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4–5 மணி

| | |
|---|---|
| மேஷம் | விவேகம் |
| ரிஷபம் | தேர்ச்சி |
| மிதுனம் | பெருமை |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கவனம் |
| கன்னி | மாற்றம் |
| துலாம் | களிப்பு |
| விருச்சிகம் | வரவு |
| தனுசு | அமைதி |
| மகரம் | ஆசை |
| கும்பம் | இன்பம் |
| மீனம் | கடமை |

## விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் ஓய்வு பெறுவதாக அறிவிப்பு



**புதுடில்லி,ஜன.22:**

உலகளவில் பேசப்படும் விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் இந்தியா வம்சாவளியை சேர்ந்தவர். சுனிதாவின் தந்தையான அமெரிக்க விஞ்ஞானி தீபக் பாண்டியா, குஜராத்தை பூர்வீகமாக கொண்டவர்.

கடந்த ஆண்டு 59 வயதான சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோரும்(62) மற்றும் சில குழுவினருடன் நாசாவின் சார்பில் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் போயிங் ஸ்டார்லைனர் என்ற விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

8 நாட்கள் தங்கி இருந்து பூமிக்கு திரும்ப வேண்டிய அவர்கள், போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அங்கேயே தங்க வேண்டியதாயிற்று.

286 நாட்கள் (9 மாதங்கள்) நாட்களுக்கு பிறகு இந்த ஆண்டு மார்ச் 18 ஆம் தேதி சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் பூமிக்கு பத்திரமாக அழைத்து வரப்பட்டனர்.

இந்நிலையில், 27 ஆண்டுகள் நாசாவில் பணிபுரிந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இதுவரை 3 முறை விண்வெளிக்கு சென்று, 608 நாட்கள் விண்வெளியில் விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் தங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திமுகவில் இணைந்தார் வைத்திலிங்கம்!



**சென்னை,ஜன.22:**

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தின் ஆதரவாளரான வைத்திலிங்கம் தனது எம்எல்ஏ பதவியை ராஜிநாமா செய்த நிலையில் திமுகவில் இணைந்தார்.

அதிமுகவில் இருந்து விலகிய முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், அதிமுக தொண்டர் உரிமை மீட்புக் குழு என்ற அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வருகிறார். இதில் ஓபிஎஸ் ஆதரவாளராக இருந்த தஞ்சை ஒரத்தநாடு தொகுதி எம்எல்ஏ வைத்திலிங்கம் தனது பதவியை இன்று ராஜிநாமா செய்துள்ளார். சென்னை தலைமைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் அப்பாவுவிடம் தனது ராஜிநாமா கடிதத்தை வழங்கினார்.

தொடர்ந்து இவர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். வைத்திலிங்கத்துடன் அவரது மகன் பிரபுவும் திமுகவில் இணைந்துள்ளார்.

கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி, பதவியில் இருக்கும்போது வேறு ஒரு கட்சியில் இணையக்கூடாது என்பதால், வைத்திலிங்கம் தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

வைத்திலிங்கம் இதுவரை 4 முறை ஒரத்தநாடு தொகுதி எம்எல்ஏவாக இருந்தவர், முன்னாள் அமைச்சராகவும் இருந்துள்ளார்.

சமீபத்தில், ஓபிஎஸ் ஆதரவாளர்களான மனோஜ் பாண்டியன், மருது அழகுராஜ், முன்னாள் எம்எல்ஏ சுப்புரத்தினம் ஆகியோர் திமுகவில் இணைந்தனர்.

அதிமுகவில் இருந்து விலகிய செங்கோட்டையன் விஜய்யின் தவெகவில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

## அதிமுக சர்வாதிகாரமாக செயல்படுகிறது:

திமுகவில் தன்னை இணைத்துக் கொண்ட பின்னர் செய்தியாளர்களுடன் அவர் பேசியதாவது:

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை மக்கள் போற்றுகிறார்கள், புகழ்கிறார்கள். அனைத்து மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் திட்டங்களை அமல்படுத்தி வருகிறார்.

அதிமுகவில் இருந்து நான் விலகினாலும் அண்ணா ஆரம்பித்த தாய் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளேன். விரைவில் தேர்தல் வரவுள்ளது. முடிவு சீக்கிரமாக எடுக்க வேண்டும், என்பதால் திமுகவில்



இணைந்துள்ளேன். நான் எந்த தேவையையும் முன் வைக்கவில்லை.

தஞ்சையில் 26 ஆம் தேதி இணைப்பு விழா

திமுகவில் இருந்து வந்ததுதான் அதிமுக. சமூகநீதி, மக்களுக்கு சேவை செய்வதற்காக தொடங்கப்பட்ட கட்சி திமுக. அதிமுக சுதந்திரமாக செயல்படாமல் சர்வாதிகாரமாக செயல்படுகிறது. இன்னும் நிறைய பேர் திமுகவிற்கு வரவுள்ளனர். முதல்வர் தலைமையில் தஞ்சையில் 26 ஆம் தேதி இணைப்பு விழா நடைபெற உள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், டிடிவி தினகரன் தரப்பில் தனிப்பட்ட முறையில் என்னை இணைவதற்கு அழைத்தார்கள். ஆனால் நான் செல்லவில்லை. அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தேன். அவர்களது நடவடிக்கை எனக்கு பிடிக்கவில்லை என மேலும் கூறினார்.

## பிப். 7ல் விருதுநகரில் தி.மு.க. இளைஞர் அணி தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு

திருவண்ணா மலை, கலைஞர் திடலில், 28 கழக மாவட்டங்களுக்கு உட்பட்ட 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் முதல் பாகம் வரை, வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் என ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இளைஞர் அணி நிர்வாகிகள் வெண் சீருடை அணிந்து, "பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ" என்று சொல்லத்தக்க வகையில், அகிலமே வியக்கும் வண்ணம் மாபெரும் எழுச்சியோடு "தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகி கள் சந்திப்பு" கடந்த 14.12.2025 அன்று வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து;

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில்;

வருகிற 07.02.2026 சனிக்கிழமை, மாலை 4.00 மணி அளவில், விருதுநகர், 'கலைஞர் திடலில் "தென் மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு" நடைபெற உள்ளது. இதில், தென்மண்டலத்தைச் சேர்ந்த கழக மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை மற்றும் வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் வெண்சீருடை அணிந்து வரலாறு படைத்திட, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இளைஞர் அணி நிர்வாகிகளை "தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கு" அழைத்து வரும் பொறுப்பினை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வரலாறு படைக்கப் போகும் இந்த "தி.மு.க. இளைஞர் அணி தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பில்" அமைச்சர் பெருமக்களான கே.ஆர். பெரியகருப்பன், பி.கீதாஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், த.மனோதங்கராஜ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி. ராஜா நன்றியுரையாற்றுகிறார்.

# அதிமுக - பாஜக கூட்டணியில் இணைந்தது அமமுக!



**சென்னை,ஜன.22:**

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மீண்டும் டிடிவி தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் இணைந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஓரிரு மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் கட்சிகளிடையே கூட்டணி பேச்சுவார்த்தை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

வரும் தேர்தலில் அதிமுக - பாஜக கூட்டணி மீண்டும் உருவாகியுள்ள நிலையில் அதில் பாமகவின் அன்புமணி தரப்பு இணைந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மீண்டும் இணைந்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் சென்னையில் செய்தியாளர்களுடன் பேசியபோது இதனை உறுதிப்படுத்தினார்.

அவர் பேசுகையில், "தமிழ்நாட்டில் மக்கள் விரும்புகிற நல்லாட்சிக்கு எங்களுடைய ஆதரவைத் தெரிவிக்கிறோம். என்றைக்கும்விட்டுக்கொடுத்துப் போன்றவர்கள் கெட்டுப் போவதில்லை. என்னதான் இருந்தாலும் இது பங்காளிச் சண்டை. 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்' என ஏற்கெனவே நான் பொதுக்குழுவில் சொன்னேன். பழைய விஷயங்களை நினைத்து, கட்சி நலனையும் தமிழ்நாட்டு நலனையும் பின்னுக்குத் தள்ளிவிடக் கூடாது என்று நோக்கத்தோடு இந்த முடிவெடுக்கிறோம். நாங்கள் விட்டுக்கொடுப்பதால் கெட்டுப்போவதில்லை.

ஜெயலலிதாவின் தொண்டர்கள் என்ற முறையில் ஓரணியில் திரண்டு மீண்டும் தமிழ்நாட்டில் அம்மாவின் ஆட்சி வருவதற்கு மக்களாட்சி வருவதற்கு நல்லாட்சி வருவதற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைகிறோம்" என்று தெரிவித்தார்.

கூட்டணி தொடர்பாக டிடிவி தினகரன் இன்று(புதன்கிழமை) காலை சென்னையில் உள்ள தனியார் ஹோட்டலில் பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயலைச் சந்தித்தார். தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் உடனிருந்தனர். பியூஷ் கோயல் உள்ளிட்டோருடன் டிடிவி தினகரன் புகைப்படம் எடுத்துக்கொண்டு கையை உயர்த்தி கூட்டணியை உறுதி செய்தார். தொடர்ந்து தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. என்டிஏ கூட்டணியில் அதிமுக, பாஜக, பாமக(அன்புமணி), அமமுக, ஜி.கே. வாசனின் தமாகா ஆகிய கட்சிகள் உள்ளன. தேமுதிகவையும் இணைக்க பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. முன்னதாக என்டிஏ கூட்டணியில் அமமுக இருந்த நிலையில், கூட்டணியில் அதிமுக மீண்டும் இணைந்ததால் டிடிவி தினகரன் விலகினார். என்டிஏ கூட்டணியில் எடப்பாடி பழனிசாமி முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து டிடிவி தினகரன் கூட்டணியில் இருந்து விலகியது குறிப்பிடத்தக்கது. தற்போது சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி மீண்டும் என்டிஏ கூட்டணியில் டிடிவி தினகரன் இணைந்துள்ளார்.

## டி.டி.வி.தினகரனை அன்போடு வரவேற்றார் - இ.பி.எஸ்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்த அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி. வி.தினகரனை அ.தி. மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வரவேற்று, வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் எக்ஸ் தள பதிவில்,

தீயசக்தி தி.மு.க.-வின் கொடுங்கோல் ஆட்சியை வேரடி மண்ணோடு வீழ்த்திடவும், வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளியை வைத்திடவும்,



புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் அமைத்திட, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இன்றைய தினம் இணைந்துள்ள அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் மரியாதைக்குரிய டி.டி. வி.தினகரனை அன்போடு வரவேற்று, அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் நலன் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு, நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து, தி.மு.க. குடும்ப ஆட்சியின் பிடியில் இருந்து மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 'எங்களுக்குள் இருப்பது பங்காளி சண்டைதான்': டி.டி.வி.

அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியில் இணைவது தொடர்பாக டி.டி. வி.தினகரன் சென்னையில் உள்ள தனது கட்சி அலுவலகத்தில் இன்று ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் தேர்தல் கூட்டணி தொடர்பாக பல்வேறு விஷயங்கள் பேசப்பட்டன.

பின்னர் டி.டி. வி.தினகரன் நிருபர்களிடம் கூறியதாவது:-

தமிழ்நாட்டில் மீண்டும் ஜெயலலிதா ஆட்சியை கொண்டு வருவதற்கு தேசிய



ஜனநாயக கூட்டணியில் இணைகிறோம். மக்கள் விருப்பம் நல்லாட்சியை கொடுக்க இந்த கூட்டணியில் சேருகிறோம். எங்களுக்குள் இருப்பது பங்காளி சண்டை மட்டுமே. விட்டு கொடுப்பவர்கள் கெட்டுப் போவ தில்லை.

தமிழகத்தில் நல்லாட்சி உருவாக நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம். அ.தி. மு.க.வின் தொண்டர்கள் ஓரணியில் திரண்டு அம்மாவின் மக்களாட்சி அமைய நாங்கள் இந்த நிலைப்பாட்டை எடுத்து உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

### விடுபட்ட பயனாளிகளுக்கு பொங்கல் பரிசு



க/மல்லபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு நியாயவிலைக் கடையில் விடுபட்ட பயனாளி 86 வயது மூதாட்டி ஒருவருக்கு பொங்கல் பரிசுப்பொரு ளுடன், பணம் 3000 மும் வழங்கப்பட்டது. செய்திகுடந்தை பரிபூரணன்.



வானமாமலை பிளவனோத்ஸவம் (தெப்போத்ஸவம்) நாள் 02 - ஸ்ரீ வரமங்கை நாச்சியார் சமேத ஸ்ரீ தெய்வநாயகப் பெருமாள் ஸ்ரீமத் மணவாள மாமுனிகளுடன்.



திருமயிலை ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் தெப்பம் மூன்றாம் திருநாள் திவ்ய சேவை.

# புவிசார் குறியீடு பெற்ற மாநிலங்களில் தமிழ்நாட்டுக்கு 2-வது இடம்

**சென்னை, ஜன.22:** ஒரு பொருளின் தரம், அதன் உற்பத்தி முறை மற்றும் சிறப்பம்சங்கள் அந்த இடத்தின் மண், காலநிலை அல்லது அங்கு வாழும் மக்களின் பாரம்பரியத் திறமையோடு நெருங்கிய தொடர்புகொண்டிருக்கும்போது அதற்கு புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது. இது ஒரு பொருளின் பூர்வீகத்தை உலகிற்குப் பறைசாற்றும் முத்திரையாகச் செயல்படுகிறது. நுகர்வோர் ஒரு பொருளை வாங்கும்போது, அது உண்மையான இடத்திலிருந்து வந்த தரமான பொருள்தான் என்பதற்கு இது சான்றாக அமைகிறது.

இந்த புவிசார் குறியீடு விவசாயம், கைவினை, உணவு, இயற்கை மற்றும் கைத்தொழில் சார்ந்த பொருட்களுக்கு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் புவிசார் குறியீடு என்பது ஒரு மண்ணின் பாரம்பரியத்தையும், அந்த மக்களின் உழைப்பையும் அங்கீகரிக்கும் உலகளாவிய கவுரவம் ஆகும். இது போலித் தயாரிப்புகளிடம் இருந்து உண்மையான உள்ளூர் உற்பத்தியாளர்களை காக்கும் ஒரு கேடயமாகவும் திகழ்கிறது.

அந்த வகையில் புவிசார் குறியீடு பெறுவதில் இந்தியாவில் தமிழ்நாடு சிறந்து விளங்கி வருகிறது. இதுவரை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும், விளையும் 74 வகையான பொருட்களுக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. சமீபத்தில் உறையூர் பருத்திச் சேலை, கவுந்தப்பாடி நாட்டுச் சர்க்கரை, நாமக்கல் கல்சட்டி, தூயமல்லி அரிசி, அம்பாசமுத்திரம் சொப்புச் சாமான்கள் ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றன.

இதுவரை புவிசார் குறியீடு கிடைக்கப் பெற்ற 74 பொருட்களில் கைவினை பொருட்கள் பிரிவில் 38 பொருட்களுக்கும், உணவுப் பொருட்கள் பிரிவில் 9 பொருட்களுக்கும், உற்பத்திப் பொருட்கள் பிரிவில் 3 பொருட்களுக்கும், விவசாயப் பொருட்கள் பிரிவில் 24 பொருட்களுக்கும் கிடைத்திருப்பதாக தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை புள்ளி விவரங்களாக தெரிவித்துள்ளது. கடந்த 2024-ம் ஆண்டு ஏப்ரல் வரை 58 பொருட்களுக்கு புவிசார் குறியீடு கிடைத்திருந்த நிலையில், கடந்த 21 மாதங்களில் 16 பொருட்களுக்கு மேலும் புவிசார் குறியீடு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த புவிசார் குறியீடு மாநிலத்தின் செழுமையான பாரம்பரியம், திறமையான கைவினைத்திறன் மற்றும் விவசாய சிறப்பை பிரதிபலிக்கிறது. அத்துடன் புகழ்பெற்ற கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் முதல் தனித்துவமான விவசாய விளைபொருட்கள், பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் வரை, புவியியல் குறியீடுகள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளின் தனித்துவமான அடையாளம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுகின்றன.

இதன் மூலம் புவிசார் குறியீடு பெறுவதில் மாநிலங்களுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது. இதில் தமிழ்நாடு 2-வது இடத்தில் உள்ளது. முதலிடத்தில் உத்தரபிரதேச மாநிலம் 77 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற்றிருக்கிறது.

# மாமூல் தர மறுத்த பெண்ணை கைது செய்ய வைத்த விவகாரம்: தனிப்படை போலீஸார் 3 பேர் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றம்

**சென்னை, ஜன.22:** கடந்த மாதம் 24-ம் தேதி மயிலாப்பூர் பாபநாசம் சிவன் சாலையில் போலீஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு 20 லிட்டர் கேனில் சாராயத்தை மறைந்து வைத்திருந்ததாக மயிலாப்பூர், பிடாரியம்மன் கோயில் தெருவை சேர்ந்த வனிதா (36) என்பவரை கைது செய்தனர்.

ஆந்திராவிலிருந்து சட்ட விரோதமாக சாராயத்தை வாங்கி வந்து, தண்ணீர் கேன் போடுவதுபோல மறைத்து விற்பனை செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் திடீர் திருப்பமாக, மாமூல் கொடுக்க மறுத்ததால் மயிலாப்பூர் காவல் துணை ஆணையரின் தனிப்படையை சேர்ந்த 3 போலீஸார் வனிதாவை சிக்க வைத்திருப்பது தெரியவந்தது. வனிதா மீது ஏற்கெனவே மதுபாட்டில்கள் விற்பனை செய்தது தொடர்பாக வழக்குகள் உள்ளன.

தற்போது, அவர் திருந்தி வாழ்வதுடன், வீடு வீடாக தண்ணீர் கேன் போட்டு வாழ்க்கையை நடத்தி வருகிறார். இந்நிலையில்தான் அவரிடம் தனிப்படை போலீஸார் மாமூல் கேட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக உயர் போலீஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இதில், போலீஸார் மீதான குற்றச்சாட்டு உண்மை என தெரியவந்தது.

இதையடுத்து, தனிப்படையைச் சேர்ந்த தலைமைக் காவலர் வினோத் குமார் (ஜாம்பஜார் காவல் நிலையம்), முதல்நிலை காவலர் பிரகலநாதன் (ராயப்பேட்டை காவல் நிலையம்), முதல்நிலை காவலர் செல்வகுமார் (பட்டினப்பாக்கம்) ஆகிய 3 பேர் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றப்பட்டனர்.

# தமிழகத்தில் மேலும் 2 நாட்கள் குளிர் நீடிக்கும் - வானிலை ஆய்வு மையம்

**சென்னை, ஜன.22:** தமிழகத்தில் பல பகுதிகளில் அடுத்த 2 நாட்கள் மூடுபனியுடன் கூடிய குளிர் நீடிக்கும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் நிலவும் வானிலை அமைப்பு நகர்ந்து வரும்போது நாளை மறுநாள் முதல் மாநிலத்தின் சில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதனால் இரவுகளில் வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. கடந்த 2 நாட்களாக பல இடங்களில் பனி மூட்டமான காலை பொழுதும், இரவில் அதிக குளிரும் நிலவின.

குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை குறைந்துள்ளது. சென்னை நுங்கம்பாக்கத்தில் 20.3 டிகிரி செல்சியசும், மீனம்பாக்கத்தில் 19.3 செல்சியசும், குறைந்தபட்ச வெப்பநிலையாக பதிவாகி உள்ளது. வடகிழக்கு பருவமழை திங்கட்கிழமை விலகியதால் அடுத்த 2 நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவும். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நாளை வரை குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பை விட குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் இரவில் குளிர் தொடர வாய்ப்பு உள்ளது.

இந்த வார இறுதியில் தமிழகத்தில் மழை பெய்யக்கூடும். தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக 23-ந்தேதி முதல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# மாமல்லபுரத்தில் பிப்ரவரி 2, 3 தேதிகளில் தமிழ்நாடு சர்வதேச சுற்றுலா முதலீட்டாளர் மாநாடு

**சென்னை, ஜன.22:** தமிழ்நாடு சர்வதேச சுற்றுலா முதலீட்டாளர் மாநாடு மாமல்லபுரத்தில் பிப்.2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ளதாக, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன், தொழில்துறை அமைச்சர் டிஆர்பி ராஜா ஆகியோர் தலைமைச் செயலகத்தில் நேற்று செய்தியாளர்களுக்கு கூட்டாக பேட்டி அளித்தனர்.

அப்போது அமைச்சர் ராஜேந்திரன் கூறியதாவது: தமிழக சுற்றுலா துறையை மேம்படுத்தும் பொருட்டு சுற்றுலா துறைக்கென தனிக்கொள்கையை முதல்வர் உருவாக்கி கொடுத்துள்ளார்.

மாநிலத்தில் 300 சுற்றுலா தலங்களை மேம்படுத்த கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. தமிழக பொருளாதாரத்தை 2030-ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்த முதல்வர் இலக்கு நிர்ணயித்துள்ளார். அந்த பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலா துறையின் வளர்ச்சி 12 சதவீதம் அளவுக்கு இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

தற்போது சுற்றுலா துறையில் முதலீட்டாளர்களை கவரும்வகையில் தமிழ்நாடு சர்வதேச சுற்றுலா முதலீட்டாளர் மாநாட்டை நடத்த முதல்வர் முடிவெடுத்துள்ளார். இந்த மாநாடு பிப். 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் சென்னை அருகேயுள்ள மாமல்லபுரத்தில் முதல்வர் தலைமையில் நடைபெற உள்ளது.


இந்த மாநாட்டில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் முதலீட்டாளர்கள் பங்கேற்கின்றனர். மருத்துவ சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, சாகச சுற்றுலா என அனைத்து வகை சுற்றுலாக்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் இந்த முதலீட்டாளர் மாநாடு நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து அமைச்சர் டிஆர்பி ராஜா கூறியதாவது: இந்தியாவில் சுற்றுலா செல்வோரின் முதல் விருப்ப தேர்வாக இருப்பது தமிழகம்தான். தற்போது பாரம்பரிய சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, ஆன்மிக சுற்றுலா போன்றவற்றுக்கு மட்டுமே முக்கித்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. டிசம்பர், ஜனவரி என்றால் இசைவிழா என்ற அளவில்தான் வெளியே தெரிகிறது. இதையும் தாண்டி ஏராளமான விஷயங்கள் உள்ளன.

அவற்றையும் நாம் கொண்டாட வேண்டியது அவசியம் என்பதுதான் முதல்வரின் சிந்தனை. தற்போது புதிய முயற்சியாக, சுற்றுலா மேம்பாட்டுக்கு தேவையான நிலங்களை எங்கள் துறையின் சிப்காட் நிறுவனம் தேர்வு செய்து வழங்கும். அதை சுற்றுலா துறை மேம்படுத்தும். இதுவரை இல்லாத புதிய முயற்சி இது.

இத்திட்டத்தின் கீழ், புதிதாக 40 இடங்களை அடையாளம் கண்டுள்ளோம். தமிழகத்தில் 1,076 கி.மீ. நீள கடற்கரை இருக்கிறது. ஆனால், இந்த நீண்ட கடற்கரையை சுற்றுலா மேம்பாட்டுக்கு நாம் இன்னும் முழுமையாக பயன்படுத்தவில்லை. கடற்கரை சுற்றுலா திட்டங்களை செயல்படுத்தினால் மீனவர்களின் பொருளாதாரம் மிகப்பெரிய அளவில் உயரும் என்று அவர் கூறினார்.

முன்னதாக, தமிழ்நாடு சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டுக்கான லோகோவை அமைச்சர்கள் இருவரும் அறிமுகப்படுத்தினர். பேட்டியின் போது சுற்றுலாதுறை செயலர் கே.மணிவாசன், சுற்றுலாத் துறை ஆணையர் ஜெ.இன்னசென்ட் திவ்யா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.







# அ.தி.மு.க. ஆட்சியில் காதல் ஜோடிகள் பஸ்களில் இலவசமாக பயணிக்கலாம் - ராஜேந்திரபாலாஜி



**சிவகாசி, ஜன.22:** விருதுநகர் மாவட்டம் சிவகாசி பாவடி தோப்பு பகுதியில் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. மகளிர் அணி சார்பில் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி பேசியதாவது:-

எம்.ஜி.ஆர். ஆட்சியை மீண்டும் கொண்டு வருவோம் என்று சிலர் பேசுகிறார்கள். ஆனால் எம்.ஜி.ஆ.ர் ஆட்சியை உருவாக்கவும், மீண்டும் கொண்டு வரவும் முடியும் என்றால் அது அவரது உண்மையான தொண்டர்களால் மட்டும்தான் முடியும். அ.தி.மு.க. தொண்டர்கள் ஒருபோதும் சிதற மாட்டார்கள்.

வரும் சட்டசபை தேர்தலில் தி.மு.க.வை வீழ்த்தி அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும். மக்கள் ஏற்கனவே முடிவு செய்துவிட்டார்கள். மே 5ஆம் தேதி எடப்பாடி பழனிசாமி தமிழக முதல்-அமைச்சராக பதவியேற்கப்போகிறார். எடப்பாடி பழனிசாமி முதல்-அமைச்சராக வேண்டும் என்பதே மக்கள் தீர்ப்பு.

அதிமுக அறிவித்துள்ள தேர்தல் அறிக்கை மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது. ஆட்சி பொறுப்பேற்ற உடன் முதலில் கையெழுத்திடப்படும் திட்டமே, அனைத்து ரேஷன் அட்டைதாரர்களின் வங்கி கணக்கில் 2,000 ரூபாய் செலுத்தும் திட்டம்தான். கருப்பு அட்டை, சிவப்பு அட்டை, சீனி அட்டை என எந்த பாகுபாடும் இல்லை.

ரேஷன் அட்டை இருந்தால் அனைவருக்கும் இந்த தொகை கிடைக்கும். தி.மு.க. அறிவித்த மகளிர் உரிமைத் தொகை திட்டம் முறையாக வழங்கப்படவில்லை. அந்தத் திட்டம் முழுக்க முழுக்க ஏமாற்று வேலை. மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த கட்சி தி.மு.க. அறிவித்த பல திட்டங்களையும் செயல்படுத்தாமல் பட்டை நாமம் போட்டது போல் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறது.

அ.தி.மு.க. டெல்லியில் வைத்துள்ள கூட்டணியின் காரணமாக, அறிவித்துள்ள திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்த முடியும். மத்திய அரசிடம் சண்டை போடாமல், பேசிக் கேட்டுப் பெற தெரிந்த ஆட்சிதான் மக்களுக்கு நன்மை செய்ய முடியும். டெல்லியில் மோடி ஆட்சி, தமிழகத்தில் எடப்பாடி ஆட்சி - இதுதான் தமிழகத்திற்கு நல்ல தருணம்.

தி.மு.க. அரசு மகளிருக்கு மட்டும் இலவச பஸ் பயணத்தை அறிவித்து, ஒன்றாக இருந்த குடும்பங்களைப் பிரித்துவிட்டது. கணவன் தனியாக, மனைவி தனியாகப் பயணிக்க வேண்டிய நிலையை உருவாக்கியது. அந்தப் பிரிந்த குடும்பங்களை மீண்டும் ஒன்றாகச் சேர்க்கும் வகையில், ஆண்களுக்கும் இலவச பஸ் பயணத் திட்டத்தை எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். இனிமேல் ஆண்கள் தங்கள் மனைவியோடும், காதலியோடும் அரசு பஸ்களில் இலவசமாக பயணித்து சினிமாவுக்கு செல்லலாம், ஊர் சுற்றலாம்.

திருத்தங்கல் ரெயில்வே மேம்பாலத்துக்கு சில மாதங்களுக்கு முன்பு, பிரதமர் மோடி காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார். தற்போது அதே மேம்பால கட்டுமான பணிக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டி உள்ளார். வருகிற சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 210 இடங்களில் வெற்றி பெறும். வருகிற 23-ந்தேதி சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் பிரதமர் மோடி முன்னிலையில் பா.ஜனதா, அ.தி.மு.க. கூட்டணி தலைவர்கள் ஒரே மேடையில் இருப்பார்கள்.

கூட்டணி குறித்த அனைத்து பேச்சுவார்த்தைகளும் முடிந்துவிட்டன. எல்லோரும் அ.தி.மு.க. கூட்டணிக்குள் வந்து சேர்வார்கள். அ.தி.மு.க.வின் ஒரு வாக்கு கூட பிரியாது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் தொண்டர்கள் அனைவரும் துப்பாக்கிபோல் ஒரே அணியில் நிற்போம். தி.மு.க.வை ஆட்சியிலிருந்து அகற்றி, எடப்பாடி பழனிச்சாமியை முதல்-அமைச்சர் நாற்காலியில் அமர வைக்கும் வரை அ.தி.மு.க. ஓயாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# “டப்பிங்குக்கு குரல் கொடுத்தால் போதும் என விஜய் நினைக்கிறார்” - நடிகர் கருணாஸ் விமர்சனம்

**சென்னை, ஜன.22:** சினிமா டப்பிங்குக்கு குரல் கொடுத்தால் போதும் என விஜய் தி நினைக்கிறார் என்று, முக்குலத்தோர் புலிப்படை கட்சித் தலைவரான நடிகர் கருணாஸ் விமர்சனம் செய்துள்ளார். செய்தியாளர்களிடம் கூறியதாவது: இதுகுறித்து அவர் சிவகங்கையில் சினிமா டப்பிங்குக்கு குரல் கொடுத்தால்போதும் என விஜய் நினைக்கிறார்.

அது தவறானது. ஜனநாயகன் திரைப்பட விவகாரத்தில் பாஜக அழுத்தம் இருக்கிறதா என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் நிறைந்த சட்டப்பேரவையிலிருந்து அதிமுக வெளிநடப்பு செய்வது கேலிக்கூத்தாக உள்ளது. இது மக்களை ஏமாற்றும் செயல்.

அதிமுகவின் தேர்தல் அறிக்கை என்பது பழைய சுரைக்காய். சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும். மத்திய அரசு நிதி தராவிட்டாலும், மக்களுக்கான திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். இது மக்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது எனக் கூறினார்.

# உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக சர்ச்சை கருத்து; பாஜக நிர்வாகி மீதான வழக்கு ரத்து



**மதுரை, ஜன.22:** கடந்த 2023-ம் ஆண்டில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் நடந்த சனாதன ஒழிப்பு மாநாட்டில் தற்போதைய துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார். அதில் அவர் பேசியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் டெல்லியை சேர்ந்த பா.ஜனதா நிர்வாகி அமித் மாளவியா என்பவர் எக்ஸ் தளத்தில் முதல்-அமைச்சர் மற்றும் துணை முதல்-அமைச்சர் ஆகியோரின் படங்களை பதிவிட்டு, சில சர்ச்சை கருத்து தெரிவித்து இருந்ததாக கூறப்படுகிறது.

எனவே அவர் மீது வழக்குபதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தி.மு.க. வக்கீல் அணி நிர்வாகி தினகரன், திருச்சி போலீசில் புகார் செய்தார்.அந்த புகாரின்பேரில் பல்வேறு சட்டப்பிரிவுகளின்கீழ் அமித் மாளவியா மீது போலீசார் வழக்குபதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என அவர், மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். அந்த மனு நீதிபதி ஸ்ரீமதி முன்பு விசாரணைக்கு வந்தது. முடிவில், அமித் மாளவியா மீதான வழக்கை ரத்து செய்து நீதிபதி உத்தரவிட்டார்.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
மாதமிருமுறை பக்தி இதழ்
www.arultharumdeivam.com
Manjal Mart
ORDER NOW
3
CALENDAR
RS.100
MANJALMART.COM
9337501889
7789941009


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
999 ONLY


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009

# கவிதை அரங்கம்!





வெற்றி பெறுவது எப்படி
என்று யோசிப்பதை விட
தோல்வியடைந்தது எப்படி
என்று யோசித்துப்பார்
நீ கண்டிப்பாக
வெற்றி பெறுவாய்

பேராசை என
தோன்றினாலும்
பரவாயில்லை

எப்போதும் இலக்கு
உயரமாக இருக்கட்டும்

வாழ்க்கையில் கடினமான
இலக்கை அடைய
முயலுங்கள் நீங்கள்
வென்றால் அதனை
வழிநடத்தலாம்
தோற்றால் வழிகாட்டலாம்

## வாழ்க்கை தத்துவம்...



துரோகம் என்பது
இருளின் தோழன்
அது ஒருநாள்
உண்மையின்
ஒளியால் அழிக்கப்படும்

உறக்கம் இல்லாத நாள்
ஆரோக்கியம் இல்லாத நாள்

வாழ்க்கை ஒரு கலை
உண்மை அதன் நிறம்

நல்ல சிந்தனை
நல்ல முடிவுகளை
உருவாக்கும்

விடாமுயற்சி
தோல்விகளை வெல்லும்
ஒற்றை மருந்து

# இலக்கியத் தீ....?

வழக்கமாக அலைபேசியில் மாலை நேரத்தில் தனக்குத் தெரிந்த இலக்கிய ஆர்வலரோடு உரையாடி முடித்த செம்மலை " நமக்காக ஏதாவது செய்யின்னு சொன்னா செய்யமாட்டார் அவ்வளவு நல்லவர்" என்று மனதில் நினைத்துக் கொண்டார். இருந்தும் இலக்கியத் தொடர்புடைய சுவையான, கருத்தாழமுடைய சொற்களைப் பயன்படுத்தி, அவருக்கு இணையாக அவருடைய கருத்தை மறுத்து சொற்போர் செய்வதை அதிகம் நேசிப்பார் செம்மலை. கடைசியாக "ஐயா, நானும் பலமுறை உங்ககிட்டக் கேட்டன். நீங்களும் ஒவ்வொரு முறையும் என்னுடைய புத்தகத்துக்கு அணிந்துரை எழுதித் தரன்னுச் சொல்லி, இதுவர எழுதித் தரவேயில்லை" என்று நேரடியாகப் சொன்னவுடன், எதிர்முனையிலிருந்து இலக்கியவாதி "தம்பி, முதல் புத்தகம் அருமை. அடுத்தடுத்து நீங்க எழுதினது அனைத்தும், நான் எதிர்பார்க்கிற மாதிரியில்ல. அதெல்லாம் குப்பை." என்று மூஞ்சால் அடித்தது போல் சொன்னவுடன், செம்மலையின் பேச்சில் தயக்கம் தெரிந்தது. "சரிங்க ஐயா, நன்றி. இன்றைய இலக்கிய சாரல் அருமையா இருந்தது. நல்ல தகவல்களைப் பல சங்க இலக்கிய நூல்களிலிருந்து எடுத்துக் கொடுத்தீங்க. இன்றைய நாளை அழகான நாளாக நகர்த்தியதற்கு மிக்க மகிழ்சி." என்று இணைப்பைத் துண்டித்தார். குப்பை என்றச் சொல்லைக் கேட்டதும், எரிமலை வெடித்தது போல் செம்மலையின் உள்ளம் குமுறியது. கனத்த மனதுடன் இரவு உணவை உண்டுவிட்டு, கொஞ்சம் நேரம் புத்தகத்தைப் படித்து முடித்து தூங்கினார். இருந்தும் குப்பை என்றச் சொல் செம்மலையின் இதயத்தைச் சம்மட்டியால் அடித்ததுபோல் இருந்தது. செம்மலை மெல்ல முடியாமலும் வெளியேச் சொல்ல முடியாமலும் உள்ளுக்குள் தவித்தார்.

மறுநாள் காலையில் தெருவில் மணி ஓசைக் கேட்டு வெளியே வந்த செம்மலை, " கொண்டாமா சீக்கிரம். அடுத்த விடு போகணும்" என்று சொன்ன குப்பை வாங்கும் பெண்மணியின் வண்டியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். "என்னய்யா குப்பை வண்டியை உத்துப் பாக்குறீங்க" என்று அந்தப் பெண்மணி கேட்டவுடன், " இல்லம்மா, நாங்க பயன்படாதுன்னு கொடுக்கிறக் குப்பையை, நீங்கப் பக்குவமா மக்கன குப்பை மக்காதக் குப்பைன்னு பிரிக்கிறீங்க. ஆனா, ஒரு நண்பர், நான் எழுதுன எழுத்து எல்லாத்தையுமே குப்பைன்னு ஒதுக்கிட்டார். உன்ன மாதிரித் தரம் பிரிக்கிற பக்குவம் அவருக்கு இல்லை" என்று சொல்லி ஆதங்கப்பட்டார்.

செம்மலை வெளிப்படையாக அந்தப் பெண்மணியிடம் சொன்னதும் "ஐயா, நீங்க எழுதினதுல ஒன்னு சொல்லுங்க. நான் பிரித்துத் தரேன்" என்று வெகுளியாகக் கேட்டாள், மெத்தப்படித்த இலக்கியவாதியைவிட ஒரு படி உயர்ந்த இடத்தில் இருப்பதுபோல அப் பெண்மணியை நினைத்துக் கொண்டார் செம்மலை. "ஐயா எனக்குப் படிக்கத்தெரியாது. நீங்கப் படிச்சு சொல்லுங்க. உங்க எழுத்து மக்கன குப்பையா ? இல்ல, மக்காத குப்பையான்னு நான் சொல்றன்"ன்னு சொன்னாள். சிரித்துக்கொண்டே புத்தகத்தில் உள்ள சில வரிகளைப் படித்தார் செம்மலை. யார் செய்தக் குற்றம்? "நீ அழுக்கு வண்டியை இழுத்து ஊர்சுற்றி வருவதற்கு" குப்பையெடுக்கும் வேலையை பகுதிநேரமாக்கி பாகுபாடின்றி பயிற்சிகொடுத்து. சுழற்சி முறையில் வண்டியிழுத்து ஊரைச் சுத்தம் செய்யும் வேலையை அவசரச் சட்டமாக்கவேண்டும்! " என்று படித்து முடித்த செம்மலை, குப்பை எடுக்கும் பெண்ணைப் பார்த்தார். ஐயா, உங்க எழுத்துக்கள நீங்கப் படிக்கப் படிக்க, அத காதால கேட்டபோது, பல சொற்கள் தீயா எரிஞ்சுது. சில சொற்கள் சுவையா இருந்தது. அனேகமான சொற்கள் அழகா இருந்தது. ஆகையால, உங்க எழுத்துக்கள் அனைத்தும் மக்கும் குப்பைதான்" என மகிழ்சியுடன் சொன்னாள். "அதுமட்டுமில்லையா, பயிருக்கு மக்கும் குப்ப எப்படி உரமா ஆகுதோ, அதே மாதிரி உங்களுடைய எழுத்து சமுகத்துல மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முக்கியமா இருக்குது. உரமானச் சொற்கள் உங்கக் கவிதையில வளமா, நிறைய இருக்கு ஐயா. அவர் யார்.? அவரை விடுங்கய்யா, தினமும் நீங்க என்கிட்ட சொல்லுங்க. நான் சொல்றேன். உங்க எழுத்தப் பத்தி" என்று பேசி முடித்தாள், மிகப்பெரிய இலக்கியவாதி என்று மார்தட்டிக் கொள்ளுகின்ற ஜாம்பவான்களைவிட, குப்பை எடுக்கும் பெண்மணி அற்புதமான இலக்கியவாதி என்று செம்மலை நினைத்துக் கொண்டார்.

**இரா.இரமேஷ்**
கயப்பாக்கம்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஆசிரியரும் மாணவனும் பேசிக்கொண்டது;*
*நம்ம பள்ளியில் மொத்தம் 5 மாடிகள் இருக்கு.*
*ஒவ்வொரு மாடிக்கும் 15 படிக்கட்டுகள் இருக்கு.*
*ஐந்தாவது மாடிக்கு போகணும்னா எத்தனை படிக்கட்டுக்கள் ஏறணும் ?*
*எல்லா படிக்கடையும் தான் ஏறணும் சார்!*



# தினம் ஒரு சமையல்



## கோலா உருண்டைக் குழம்பு

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| மட்டன் கைமா | - 1/2 கிலோ, |
| கசகசா | - 1 தேக்கரண்டி, |
| மிளகாய்தூள் | - 1/2 தேக்கரண்டி, |
| பட்டை | - சிறுதுண்டு சோம்பு, |
| உப்பு, எண்ணெய் | - தேவையான அளவு |

**அரைக்கத் தேவையானவை :**

| | |
|---|---|
| தேங்காய் துருவல் | - 1/2 மூடி, |
| வெங்காயம் | - 1 நறுக்கியது. |
| மிளகாய் வற்றல் | - 4, |
| தனியா தூள் | - 1 மேசைக்கரண்டி, |
| சீரகம் | - 1 தேக்கரண்டி, |

மேற்கூறிய பொருட்களை வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி வதக்கி அரைத்துக் கொள்ளவும்.

**செய்முறை:**



1.கொத்திய கறியை நன்றாக சுத்தம் செய்து வேக வைத்துக் கொள்ளவும். வெந்த கறியுடன் லேசாக உப்பு சேர்த்து பட்டை, சோம்பு, கசகசா, மிளகாய்தூள் சேர்த்து மிக்ஸியில் ஒரு சுற்று விடவும்.

2.கறியுடன் மசால் கலவை சேர்ந்தவுடன் சிறிய எலுமிச்சம்பழ அளவில் அந்த கலவையை ஒவ்வொன்றாக உருட்டி தனியே வைக்க வேண்டும்.

3.குழம்பிற்கு அரைத்த மசாலாவுடன் தேவைக்கேற்ப உப்பு சேர்த்து கூட்டி வைக்கவும். குழம்பு கொதித்து வரும் போது செய்து வைத்த உருண்டைகளை ஒவ்வொன்றாகப் போடவும். தேவைக்கேற்ப கெட்டியான பதத்தில் குழம்பு வரும் போது இறக்கி விடவும். கோலா உருண்டை குழம்பு ரெடி.

## பற்பாடகம் பயன்கள்



பற்பாடகம் முழுத் தாவரமும் கைப்புச் சுவையும், வெப்பத் தன்மையும் கொண்டது. மலமிளக்கும்; பசியைத் தூண்டும்; வியர்வையைப் பெருக்கும்.

உடலைத் தேற்றும்; காய்ச்சல் தணிக்கும்; உடல் வெப்பத்தைக் குறைக்கும்; அழுகலகற்றும்; தாகம், பித்த நோய்களை போக்கி கண்களுக்கு குளிர்ச்சி உண்டாக்கும்.

நேராக வளரும் மிகச் சிறு செடி வகைத் தாவரம். 1 ½ அடி வரை உயரமானது. மென்மையானது. மிகவும் மென்மையான கம்பி போன்ற பல கிளைகளைக் கொண்டது.

வேர்கள், தடித்தவை; சிவப்பு நிறமானவை; இலைகள் நீண்டு மெலிந்த ஊசி போன்றவை. வெண்மை நிறமான சிறு பூக்களை நுனியில் தொகுப்பாகக் கொண்டவை.

விதைகள் சிறியவை. முட்டை வடிவமானவை. சொரசொரப்பானவை. தாவரத்துடன் நீரைச் சேர்த்துக் கசக்கினால் வழவழப்பான சாறு கிடைக்கும்.

மணற்பாங்கான தோட்டங்களில் தானே வளரும் தாவரம்; தமிழகம் முழுவதும் மழைக் காலங்களில் களைச் செடியாக வளர்கின்றது.

காடுகள் அழிக்கப்பட்ட சமவெளிப் பகுதிகளில் அபரிதமாக வளர்கின்றது. முழுத் தாவரமும் மருத்துவப் பயன் கொண்டது. இது காய்ந்த நிலையில் நாட்டு மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் சுரத்துடன் கூடிய பேதி குணமாக 2கிராம் பற்பாடகத்தைப் பசுமையானதாகச் சேகரித்துக் கொள்ள வேண்டும். அதனைத் தண்ணீரில் நன்றாகக் கழுவி அம்மியில் அரைத்து 200 மிலி மோரில் கலக்கி உள்ளுக்கு கொடுக்க வேண்டும். தினமும் காலை, மாலை வேளைகளில் 3 நாள்களுக்கு இவ்வாறு கொடுத்து வரவேண்டும்.

காய்ச்சல் குணமாக பற்பாடகம் முழுத் தாவரம், கண்டங்கத்திரி இலைகள், ஆடாதோடை இலைகள், தோல் நீக்கிய சுக்கு, விஷ்ணுகிரந்தி முழுத் தாவரம், வகைக்கு 10 கிராம் சுத்தம் செய்து நன்றாக நசுக்கி ஒரு லிட்டர் நீரில் போட்டு ¼ லிட்டராகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு வேளைக்கு 50 மிலி வீதம் நான்கு வேளைகள் குடிக்க வேண்டும்.

# முன்பதிவில் வசூலை வாரிக்குவிக்கும் மங்காத்தா.. பாக்ஸ் ஆபிஸ் ரிப்போர்ட்



தமிழ் சினிமாவில் புதிய படங்களுக்கு நிகராக உச்ச நட்சத்திரங்களின் ரீ ரிலீஸ் படங்கள் வசூல் செய்து வருகின்றன. விஜய்யின் கில்லி, சச்சின், ரஜினியின் படையப்பா ஆகிய படங்கள் வசூலில் பட்டையை கிளப்பின.

இதை தொடர்ந்து அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த மங்காத்தா படம் வருகிற 23ஆம் தேதி ரீ ரிலீஸ் செய்யப்படுகிறது. இப்படத்தின் முன்பதிவு கடந்த சில நாட்களுக்கு முன் தொடங்கிய நிலையில், புக்கிங் அமோகமாக நடை பெற்று வருகிறது. இந்த நிலையில், உலகளவில் இதுவரை நடந்த முன்பதிவில் மங்காத்தா படம் ரூ. 1.5 கோடி வசூல் செய்துள்ளது.

இது வெறும் ஆரம்பம் மட்டும்தான் ரிலீஸுக்கு பின் மாபெரும் வசூல் வேட்டை காத்திருக்கிறது என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை என்பது முன்பதிவிலேயே தெளிவாக தெரிகிறது. பொறுத்திருந்து பார்ப்போம் மங்காத்தா ரீ ரிலீஸ் எவ்வளவு கோடிகளை வசூல் செய்து சாதனை படைக்கப்போகிறது என்பதை.






நிதி அகர்வால் தற்போது சேலையிலும் தாராள கவர்ச்சி காட்டி போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அந்த ஸ்டில்கள் ரசிகர்கள் மத்தியில் தற்போது வைரல் ஆகி இருக்கிறது.

# இந்த வாரம் OTT-யில் வெளிவரும் எதிர்பார்ப்புக்குரிய திரைப்படங்கள்.. லிஸ்ட் இதோ



திரையரங்கில் பார்த்து கொண்டாடிய திரைப்படங்களுக்கு OTT-யிலும் நல்ல வரவேற்பு கிடைக்கிறது.

திரையரங்கில் எப்படி ஒரு படத்தை எதிர்பார்த்து காத்திருந்து ரசிகர்கள் கொண்டாடு கிறார்களோ, அதே போல் OTT-யிலும் படத்தை பார்த்து கொண்டாட இந்த தனி ரசிகர்கள் பட்டாளம் உள்ளனர்.

அதுவும் தாங்கள் பெரிதும் எதிர்பார்த்து காத்திருக்கும் படம் என்றால் சொல்லவே தேவையில்லை. இந்நிலையில், ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சில திரைப்படங்கள் இந்த வாரம் OTT-யில் வெளியாகிறது.

அது என்னென்ன படங்கள், எந்தெந்த OTT தளத்தில் அந்த படங்கள் வெளியாகிறது என்பதை பார்க்கலாம் வாங்க.

சிறை - ஜீ5 (விக்ரம் பிரபு, எல். கே. அக்ஷய் குமார், அனிஷ்மா அனில்குமார்)

தேரே இஷ்க் மே - நெட்பிளிக்ஸ் ( தனுஷ், க்ரித்தி சனோன்)

சீக்கட்டிலோ (Cheekatilo) - அமேசான் பிரைம் வீடியோ (சோபிதா துலிபாலா)

மார்க் - ஜியோ ஹாட்ஸ்டார் (கிச்சா சுதீப்)

45 - ஜீ5 (சிவராஜ்குமார், உபேந்திரா, ராஜ் பி. ஷெட்டி)

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**